மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் - 05 தமிழ் செயலட்டை - 01

பின்வரும் பந்தியை வாசித்து (1) தொடக்கம் (6) வரையான வினாக்களுக்கு விடை தருக

வண்ணத்துப்பூச்சி கூறத்தொடங்கியது. நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில் நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கி பிரிந்து சென்றுவிட்டனர்.

(1) ''சிறியது'' என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக

……

(2) ''பூக்கள்'' என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

……

(3) பந்தியில் உள்ள இடப்பெயர் ஒன்று தருக.

……

(4) ''வசித்து வந்தோம்''. என்பதை ஒருமையாக மாற்றி எழுதுக.

……

(5) பந்தியில் உள்ள தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்று தருக.

……

(6) பந்தியிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றை எழுதுக

……

(1) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லை ஒவ்வொரு வரிசையிலிருந்தும் தெரிவு செய்க.

(1) திடீரென்று (வாணம் / வானம்) இருண்டது.

(2) இந்தப் பென்சிலில் (சிறப்பாக / சிரப்பாக) என்ன இருக்கிறது?

(3) பின்வருவனவரும் சொற்களைப் பிரித்தெழுதுக

(1) பாற்சோறு ……..

(2) கொடைக்குணம் ……..

(4) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

ஆயிரத்திற்கு/ கொண்டது / இது / இருக்கைளை / மேற்பட்ட

……..

(5) தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1)அடவி (குளம் / காடு / வானம்)

www.lkedu.lk

(2). குதூகலம் (சாந்தம் / கவலை / களிப்பு)

(6) வாக்கியத்தை தரப்பட்டுள்ள எழுவாய்க்கு பொருத்தமாக மாற்றி எழுதுக

(1) நீங்கள் எப்போதும் மகிழ்சியாக .....

(2) தம்பி எப்போதும் மகிழ்ச்சியாக .....

(7) பின்வரும் சொற்களின் எதிர்பாற் சொல்லை எழுதுக

(1) மூத்தவன் .....

(2) கணவன் .....

(8) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க ?

1) படங்கள் வரைபவர் ..... (நாத்திகன் / ஓவியன்) என அழைக்கப்படுவார்

2) அரசர் வசிக்கும் இடம் (அரண்மனை /ஆச்சிரமம்) எனப்படும்

(9) கீழுள்ள அடைப்பில் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

(ஆடினான், பறந்தது, பேசினீர்கள், வந்தார்கள்

1) அவர்கள் :- .....
2) புறா .....

(10) பாடல்களில் வெற்றிடங்களில் வரவேண்டிய சொல்லை எழுதுக.

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை .....
நாடு காடு தாண்டியே
நாலு காலிற் .....

(11) "எனது வீட்டுப் பூந்தோட்டம் மிகவும் அழகானது" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களிற்கு மேற்பட்டதாகவும் எழுத்துப் பிழைகளின்றியும் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் திருத்தமானதாகவும் அமைதல் வேண்டும்.

.....

.....

.....

.....

.....

.....

www.lkedu.lk